மாகாணக் கல்வித்திணைக்களம்
கல்விஅபிவிருத்திக்கும்தேர்வுக்குமான சபை
இரண்டாம் தவணைப் பரீட்சை – 2018

# பரத நாட்டியம்

தரம் - 11

45 T I,II                மூன்றுமணித்தியாலம்

## பரதநாட்டியம் I

**கவனிக்க:**

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- 1-40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்குமுரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை இடுக.

1. பரத நாட்டியத்திற்கு அணிசேர்க்கின்ற தோல் வாத்தியம்
   1) வயலின் 2) வீணை 3) மிருதங்கம் 4) புல்லாங்குழல்
2. மேதா என்பது
   1)வேகம் 2) புத்திக்கூர்மை 3) உறுதி 4) ஆர்வம்
3. ஜாதி பேதங்களால் மாற்றமடையும் அங்கம்
   1) லகு 2) துருதம் 3) அனுத்ருதம் 4) புலுதம்
4. கண்டஜாதி துருவதாளத்தில் இறுதி லகுவை நீக்கினால் வரும் தாளத்தின் அட்சர எண்ணிக்கை
   1) 10 2) 12 3) 15 4) 17
5. மகாபலிச்சக்கரவர்த்தியின் அகந்தையை அடக்க எடுத்த அவதாரம்
   1) வராகம் 2) பரசுராமன் 3) வாமணன் 4) பலராமன்
6. இராஜவாத்தியம் என்றழைக்கப்படுவது
   1) மிருதங்கம் 2) வீணை 3) நாதஸ்வரம் 4) தவில்
7. தாத்தா என வர்ணிக்கப்படும் நாட்டியக்கலைஞர்
   1) மீனாட்சி சுந்தரம்பிள்ளை 2) இராமையாபிள்ளை
   3) கோபாலகிருஸ்ணர 4) அருணாசலக்கவிராயர்
8. இராஜராஜேஸ்வரம் கட்டப்பட்ட நூற்றாண்டு
   1) 8ஆம் 2) 10ஆம் 3) 12ஆம் 4) 15ஆம்
9. ஒரு தாளத்தின் அங்கங்கள் யாவற்றையும் ஒரு முறை பூரணமாகப் போட்டு முடித்தல்
   1) அங்கம் 2) துருதம் 3) லயம் 4) ஆவர்த்தனம்
10. ரூபக தாளத்தில் கோர்வை அமைக்கும் போது ஒரு ஆவர்த்தனத்தில் அடங்குகின்ற மாத்திரைகளின் எண்ணிக்கை
    1) 16 2) 24 3) 32 4) 64

11. ஆலாரிப்பில் இடம்பெறும் கழுத்தசைவு

1) சுந்தரி 2) திரஸ்சீனா 3) பரிவர்த்திதா 4) பிரகம்பிதா

12. சிறிய பெட்டி, மூடுதல் இவற்றைக் காட்டும் முத்திரை

1) சங்கு 2) சக்கரம் 3) சம்புடம் 4) பாசம்

13. பேருண்ட முத்திரைக்குரிய விநியோகம்

1) வெண்டி 2) பறவை 3) பந்து 4) சிவிகை

14. கிடதகதரிகிடதொம் அடவு அமைந்துள்ள தாளம்

1)ஆதி 2) ரூபகம் 3) சதுஸ்ரம் 4) திஸ்ரம்

15. உத்பிளவன பேதத்தைக் கொண்டு செய்யப்படும் அடவின் சொற்கட்டு

1)ததிங்கிணதொம் 2) கிடதகதரிகிடதொம்
3) தித்தெய்ந்த தாதெய் 4) தெய்தெய்தாம்

16. ஸ்வரமாலை என்றழைக்கப்படும் உருப்படி

1)சப்தம் 2) ஜதிஸ்வரம் 3) வர்ணம் 4) கீர்த்தனம்

17. கூத்தாட வந்தவருக்கு தக்க பாத்திரம் வழங்குதல்

1)ஊருக்குச்செல்லல் 2) சதங்கைஅணிதல் 3) சட்டம்கொடுத்தல் 4) அரங்கேற்றம்

18. தினக்கூத்து நடைபெறும் காலம் தினமும் மாலை

1)1-2மணி நேரம் 2) 3-4மணி நேரம் 3) 4-5மணி நேரம் 4) 5-6மணி நேரம்

19. முல்லைத்தீவுப் பிரதேசத்திற்குரிய கூத்து

1)வடமோடி 2) தென்மோடி 3) வசந்தன் கூத்து 4) கோவலன் கூத்து

20. தென்மோடிக்கூத்து ஆடப்படும் இடம்

1)அரங்கம் 2) கொட்டில் 3) வட்டக்களரி 4) மேடை

21. ஒரு அரங்கேற்ற நிகழ்வின் நிருத்தியப்பகுதியில் அமைந்த உருப்படி

1)ஜதிஸ்வரம் 2) அலாரிப்பு 3) வர்ணம் 4) தில்லானா

22. அலாரிப்பின் தீர்மானத்தில் இடம்பெறும் அடவு

1)தத்தெய்தாஹா 2) மண்டியடவு 3) திதிதெய் அடவு 4) ததிங்கிணதொம் அடவு

23. பொதுவாக அலாரிப்பு பாடப்படும் இராகம்

1)நாட்டை 2) மோகனம் 3) கல்யாணி 4) வஸந்தா

24. உறவுமுறையைக் காட்டுகின்ற ஹஸ்தம்

1)ஜாதிஹஸ்தம் 2) பாந்தவ்யஹஸ்தம் 3) தேவஹஸ்தம் 4) யாவும் சரி

25. இரு ஒரே முத்திரைகளைக் கொண்டு அபிநயிக்கும் தசாவதாரஹஸ்தங்கள்

1) 3 2) 4 3) 5 4) 6

26. மன்னரும் கற்றறிந்த கபையோர்களும் முன்னிலையில் ஆடும் கூத்து

1)வேத்தியல் 2) பொதுவியல் 3) அரங்கியல் 4) யாவும் பிழை

27. ஐவகை நிலங்கள் பற்றிக் கூறப்பட்ட காலப்பகுதி

1)பல்லவர்காலம் 2) சோழர்காலம் 3) சங்ககாலம் 4) சங்கமருவியகாலம்

28. வாத்சல்ய பாவம் குறிப்பது
1)குரு-சீஷ்யன் உறவு 2)நாயக-நாயகி உறவு
3)தாய்-சேய் உறவு 4)இறைவன்-பக்தன் உறவு

29. பரத நாட்டியக் கச்சேரியில் சிகரம் போன்றமைவது
1)ஜதிஸ்வரம் 2) சப்தம் 3) தில்லானா 4) வர்ணம்

30. அஷ்டபதி என்னும் உருப்பபடியில் அடங்கியுள்ள கண்டிகைகள்
1)4 2) 6 3) 8 4) 10

31. ஐந்தொழிலையும் குறித்து நிற்கும் தாண்டவம்
1)ஆனந்ததாண்டவம் 2) சம்ஹாரதாண்டவம்
3) கௌரிதாண்டவம் 4)சந்தியாதாண்டவம்

32. 11வகையான ஆடலை ஆடியவர்
1உமை 2) லக்சுமி 3) சீதை 4) மாதவி

33. காமன் ஆடிய கூத்து
1)மல்லாடல் 2) பாண்டரங்கம் 3) பேடிக்கூத்து 4) பாவைக்கூத்து

34. தெய்தெய்தத்தா அடவுகளின் எண்ணிக்கை
1)2 2) 3 3) 4 4) 5

35. தில்லானா என்னும் உருப்படியில் சாஹித்தியம்…………………. அமைந்திருக்கும்.
1)பல்லவியில் 2) அனுபல்லவியில் 3) சரணத்தில் 4) சரணஸ்வரத்தில்

36. முப்புரங்களை எரித்து வெற்றிக் களிப்பில் ஆடிய தாண்டவம் …………………… தொழிலைக் குறிக்கிறது.
1)படைத்தல் 2)காத்தல் 3)அழித்தல் 4)மறைத்தல்

37. $1_7$ 0 $1_7$ எனும் அடையாளம் குறிப்பது………………….. தாளமாகும்.
1)மிஸ்ரஜாதி ஜம்பை 2) மிஸ்ரஜாதி துருவம்
3) மிஸ்ரஜாதி மட்டிய 4) மிஸ்ரஜாதி அட

38. வாசுதேவன்,தேவகி தம்பதியினரின் மகனாக பிறந்த அவதாரம் ………….. ஆகும்.
1)ஸ்ரீராமர் 2) ஸ்ரீகிருஸ்ணர் 3) பலராமன் 4) பரசுராமன்

39. பந்தனை நல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களுக்கு எழும்பூர் ஜெகநாத சபா …………………என்னும் பட்டத்தை வழங்கியது.
1)நாட்டியக்கலாநிதி 2) பத்மபூஷண் 3) அபிநயகேசரி 4) பாரதரத்னா

40. கிராமிய வாத்தியங்களுள் தோற்கருவியாக …………………………அமைகிறது.
1)மிருதங்கம் 2)உடுக்கு 3)ஆர்மோனியம் 4)நாதஸ்வரம்

# பரதநாட்டியம் II

- முதலாம் வினாவையும் வேறு நான்கு வினாக்களையும் தெரிவு செய்து, எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

1) பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.

1. பல்லக்கு என்பதனை அபிநயிக்க பிரயோகிக்கும் முத்திரை எது?
2. காம நினைவை ஏற்படுத்தும் மலர் எது?
3. விருத்தங்கள் இழுத்துப்பாடும் முறை கொண்ட கூத்து மரபு எது?
4. மயூர முத்திரை கொண்டு அபிநயிக்கும் பாந்தவ்ய ஹஸ்தம் எது?
5. பெண்களால் மட்டும் ஆடப்படும் கூத்தின் பெயர் என்ன?
6. இராஜராஜசோழனின் விருதுப் பெயர்களில் ஒன்று எழுதுக.
7. சிருங்கார ரஸத்தினை உச்சநிலையில் பச்சையாக வெளிக்காட்டும் உருப்படி எது?
8. நள்ளிரவில் சுடுகாட்டில் ஆடப்பட்ட தாண்டவம் எது?
9. கதகளியில் பச்சை வேஷம் அணியக்கூடிய பாத்திரங்கள் 2 தருக.
10. சங்க கால ஆடல் பற்றிக் கூறும் இலக்கியங்கள் 2 எழுதுக (12புள்ளிகள்)

2) 1.நாட்டியக்கச்சேரிஅமைப்புமுறையில் ஆரம்பத்தில் இடம்பெறும் நிருத்தஉருப்படிகள் எவை? (2புள்ளிகள்)

2.இவற்றுள் இரண்டாவதாக அமைந்த உருப்படியின் இலட்சணத்தை எழுதுக. (3புள்ளிகள்)

3.நீர் கற்ற இவ்வுருப்படியின் இராகம்,தாளம் என்பவற்றைக் குறிப்பிடுக. (2புள்ளிகள்)

4.இவ்வுருப்படியின் 2ஆவது கோர்வையின் சொற்கட்டினைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுக. (5புள்ளிகள்)

3) பின்வரும் ஹஸ்தங்களுக்குரிய விநியோகங்களை கருத்துடன் எழுதுக.

1.அஞ்சலி 2.புஸ்பபுடம் 3.கடகாவர்த்தனம் 4.சம்புடம் (4×3=12புள்ளிகள்)

4) 1. தெய்வீக ஆடற்கலை எனும் நூலை எழுதியவர் யார்? (1புள்ளி)

2. இவருடைய வாழ்க்கைக் குறிப்புக்களை சுருக்கமாகத் தருக. (3புள்ளிகள்)
3. இவருக்குக் கிடைத்த பட்டங்களும் விருதுகளும் எவை? (3புள்ளிகள்)
4. நாட்டியத்திற்காக இவர் செய்த பணிகளைச் சுருக்கமாக விபரிக்குக. (5புள்ளிகள்)

5) பின்வரும் கலைச்சொற்களுக்கு சிறுகுறிப்பு எழுதுக.

1. சீஷ்யன் இலட்சணம் 2. தாண்டவம் 3. 11வகை ஆடல் (3×4=12புள்ளிகள்)

6) 1.தென்னிந்திய சாஸ்திரிய நடனங்களுள் ஆந்திர பிரதேசத்திற்குரிய நடனம் எது? (3புள்ளிகள்)

2.இந்நடனத்திற்குரிய பின்வரும் விடயங்கள் பற்றிச் சுருக்கமாக விபரிக்குக.

(i) தோற்றம் (ii) ஆடல்முறை

(iii) உடை,ஒப்பனை (iv) இசை,பக்கவாத்தியங்கள்

(v) பிரசித்தி பெற்ற கலைஞர்கள் (10புள்ளிகள்)

7) நீர் பார்த்து இரசித்த தொழிலாளர் நடனங்கள் பற்றிய விமர்சனக் கட்டுரை ஒன்று வரைக. (12புள்ளிகள்)